# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,932 — 1932 ம் ௵ ஆனி௴ 24 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரையைப் பற்றிய சட்டம்.

1932 ம் ஆண்டு தென் மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கிலுள்ள தெவுந்திர ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்துக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதியவர்கள் 1931 ம் ஆண்டின் இலங்கைச் (இராச்சிய மந்திரசபை) சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச்சட்டத்தினாற் திருத்தப்பட்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 1 ம் பிரிவின் பிரகாரம் செய்த பிரமாணங்கள்.

டி. பீ. ஜயத்திலக்க,
சுயகாரியதரிசி.

சுயகாரிய மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ஆண்டு ஆனி௴ 21 ந் உ.

தெவுந்திர ஸ்ரீ விஷ்ணு மகா தேவாலயத்துக்கு யாத்திரை போதல்.

1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க யாத்திரைக் கட்டளைச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதானங்கள்.

1. தெவுந்திர தேவாலயத்துக்குப்போகும் யாத்திரைகாரர் தெவுந்திருவில் நிற்கும் நாட்கள் 12 நாட்களுக்கு மேற்படாதிருக்கும் அவை யாவன ஜூலை௴ 14 ந் தேதி தொடக்கம் ஜூலை௴ 25 ந் தேதி வரைக்குமேயாம். முதற்சொல்லிய நாளுக்கு முன்வந்துசேரும் அல்லது இதிற் குறிக்கப்பட்டிருக்கும் காலத்துக்குமேல் நிற்கும் யாத்திரைகாரர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

2. யாத்திரைக்கு முன் அல்லது யாத்திரை காலத்தில் தெவுந்திராவில் அல்லது அதற்கடுக்க இருக்கும் ஊர்களில் தொற்றுநோய், பரம்பும் நோய், அல்லது பெருவாரிநோய் உண்டுபடுமாயின், அல்லது உதவி அரசாட்சி ஏசன்றரின் அபிப்பிராயப்படி யாத்திரை காலத்தில் தெவுந்திருவுக்குப் பரம்பக்கூடிய விதமாகத் தென் மாகாணத்திலுள்ள வேறெவ்விடத்திலும் அவ்வித நோய் உண்டுபடுமாயின் யாத்திரையைத் தடுத்து அல்லது யாத்திரை நிறுத்தப்பட்டதாக வெளியாங்கப்படுத்தி, தெவுந்திருவில் வந்திருப்பவர்கள் யாவரையும் உடனே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுத் தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப்போய் விடும்படி கட்டளையிடவும் அவர்கள் இன்ன பாதையாற் போகவேண்டும் என்பதாகக் குறிக்கவும் உதவி அரசாட்சி ஏஜன்றருக்கு நியாய முறைப்படி அதிகாரமுண்டு. உதவி அரசாட்சி ஏஜன்றரின் கட்டளையை மீறும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

3. பரம்பும் நோய் அல்லது தொற்று நோயாற் பீடிக்கப்பட்டிருந்து, சௌக்கியாதார பரிசோதனைகாரருக்கு அல்லது வைத்திய உத்தியோகஸ்தருக்கு அல்லது அவர்கள் இல்லாத நேரத்தில் தெவுந்திருவிலிருக்கும் பொலீஸ் உத்தியோகஸ்தருள் முதல் உத்தியோகஸ்தருக்கு உடனே அதைப்பற்றி அறிவியாதுவிடும் எவரும் அவ்வித நோயிருப்பதை மறைத்து வைப்பதற்கு தூண்டிவிடும் அல்லது உதவிசெய்யும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

4. யாத்திரை காலத்தில், தெவுந்திருவில், உதவி அரசாட்சி ஏஜன்றரால் அல்லது சௌக்கியாதார சங்கத்தலைவரால் அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலேயன்றி வேறெவ்விடத்திலும் மீன் அல்லது காய்கறி வைத்து விற்கும் எவரும், ஒரு சௌக்கியாதார பரிசோதனைகாரனால் அல்லது ஒரு வைத்திய உத்தியோகஸ்தரால் அல்லது அவர்கள் இல்லாத நேரத்தில் முதலியாரால் அல்லது தெவுந்திருவில் வந்திருக்கும் பொலிஸ் உத்தியோகஸ்தருள் தலைமை உத்தியோகஸ்தரால் சுகத்துக்கேற்றன வல்லவென விலக்கப்பட்ட எவ்வித மாமிசத்தையாவது, போசனத்தையாவது பானத்தையாவது, விற்கும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

5. யாத்திரை காலத்தில் தெவுந்திருவில் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கப்பட்டிருக்கும் எல்லாப் பலகாரங்களும், இனிப்புப் பண்டங்களும் மற்றைய சாப்பாட்டுச் சாமான்களும் நன்றாகச் செய்யப்பட்ட கண்ணாடிப் பெட்டிகளில் அல்லது இலையான் போகக்கூடாத வேறு பாத்திரங்களில் வைத்திருக்கப்படல் வேண்டும். அப்பாத்திரங்கள் சுத்தமாய் இருக்க வேண்டும்.

6. யாத்திரை சம்பந்தமாக உபயோகப்படுத்தப்படும் நிலத்தின் சொந்தக்காரர் அல்லது (நிலத்தைக் குத்தகை கொடுத்திருந்தால்) குத்தகைக்காரர். யாத்திரைகாலம் முழுதாக நிலைக்கக்கூடிய கக்கூசுகள், உதவி அரசாட்சி ஏஜன்றரின் அல்லது சௌக்கியாதார சங்கத்தலைவரின் அனுமதிபெற்ற இடத்திலும், மாதிரியாயும் கட்டிக்கொடுத்து ஏற்ற வசதிகள் செய்யக் கடமைப்பட்டவராவர். இந்நோக்கத்துக்காக யாத்திரை தொடங்க குறைந்தமட்டில் 10 நாட்களுக்குமுன் உதவி அரசாட்சி ஏஜன்றரின் அல்லது சௌக்கியாதார சங்கத்தலைவரின் அனுமதி பெற்றுக்கொள்ளும்படி படங்களும் விவர இடாப்பும் அவர் அனுப்பிவைக்க வேண்டும். மேலும் யாத்திரை காலம் முடியும்வரையும், தென்னந்தும்புத்தூள் அல்லது மணலும உதவி அரசாட்சி ஏஜன்ரர் ஏற்றுக்கொண்ட தூரத்திலுள்ள நெருப்புத் தண்ணீரும் ஒழுங்காகக்கொடுப்பதும் குறைந்தமட்டில் நாளுக்கு இருதரம் கக்கூசுகளிலிருக்கும் அழுக்கை அகற்றிச் சுத்தப்படுத்திவிப்பது அவரது கடமையாகும். இந்த ஒழுக்க விதியின் ஏற்பாடுகள் எதையும் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர் மீறி நடக்கு மிடத்து அவர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

7. யாத்திரை காலத்தில் உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது சௌக்கியாதார சங்கத்தில் அல்லது யாத்திரை சம்பந்தமாக உபயோகப்படுத்தப்படும் நிலத்தின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்கார

ரால் நியமித்து விடப்பட்ட இடத்திலேயன்றி வேறெவ்விடத்திலேனும் மலசலங் கழிக்கும் மெவரும் அல்லது கழிந்த அழுக்கை மண்ணால் அல்லது மணலினால் மூடத்தவறு மெவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

8. யாத்திரை சம்பந்தமாக உபயோகப்படுத்தப்படும் நிலத்தின் சொந்தக்காரர் அல்லது நிலத்தைக் குத்தகை கொடுத்திருந்தால், குத்தகைகாரர் அவ்விடத்திலுள்ள வைக்கோல், குப்பை, சாணி அல்லது எவ்வகையான கூளத்தையும் ஒரு நாளைக்குக் குறைந்தமட்டில் ஒருமுறையாவது கூட்டி அள்ளுவிக்கும் பொறுப்புடையவராவர். அக் குப்பை கூளம் எல்லாம் உதவி அரசாட்சி ஏஜன்றரால் அல்லது சௌக்கியாதார சங்கத தலைவரால் ஏற்றதென் றனுமதிபெற்ற ஓரிடத்திற் சேர்த்து எரிக்கப்படவேண்டும் அல்லது புதைக்கப்பட வேண்டும். இந்த ஒழுக்கவிதியின் ஏற்பாடுகளை நிறைவேற்ற அல்லது நிறைவேற்றுவிக்கத் தவறும் எந்தச் சொந்தக்காரராவது குத்தகைக்காரராவது ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

9. யாத்திரையின் நோக்கத்துக்காக மாத்துறையிலிருந்து தங்காலைக்குப்போகும் பெரிய றேட்டினதும் தேவாலயத்துக்குச் செல்லும் றேட்டினதும் பக்கக் கானிலிருந்து 12 அடி தூரத்துக்குள் ஒரு கொட்டிலாவது வேறு கட்டடமாவது கட்டப்படக்கூடாது. இந்தத் தூர இடைவெளிக்குள்ளே எந்தக் கடைக்காரனுவது வெற்றிலை அல்லது வேறு சாமான் விற்கும் எவராவது அவ்வித பண்டத்தையாவது விற்கும்படியாக வெளியாய் வைக்கப்படாது. இந்த ஒழுக்கவிதியை மீறும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

10. வந்திருப்பவர்களின் உபயோகத்துக்காகவேனும் வண்டிகள் விடுவதற்காகவேனும் தெவுந்திருவில் உதவி அரசாட்சி ஏஜன்றரால் புறம்பாக வைக்கப்பட்ட நிலப்பாகத்தில் ஒரு கொட்டிலாவது வேறு கட்டடமாவது கட்டப்படக்கூடாது. இந்த ஒழுக்கவிதியின் ஏற்பாடுகளை மீறும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்.

---

## காணி விற்பனவுகள்.

**No. 10,221, S. O.**—1932 ம் ஆண்டு (செப்ரெம்பர்) புரட்டாதிமீ 9 ந் திகதி, வெள்ளிக்கிழமை, முற்பகல் 8.30 மணிக்கு நாறம்மல வாடிவீட்டில், காணியுரிமை நிர்ணய உத்தியோகஸ்தரவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனைவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்தித கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விநகப்படும்.

20 காணித்துண்டுகள், வடமேன் மாகாணம், குருநாகல் டிஸ்திறிக், கற்றுகம்பொலஹறற்பற்று, மெத்தேகெற்றிய கோறளை.

இலங்கை யளவை பிரதமப்படம் 2,584. குறிச்சி—குறிகொற்றுவ.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 26 | இஸ்வெற்றியேவத்த | (1) இஸ்மாலெப்பெலாகே இபுறுலெப்பெ, (2) காசிலெப்பேலாகே உதுமாலெப்பெ, (3) காசி லெப்பெலாகே அகமது லெப்பெ, (4) அபூபக்கர்லாகே, ஆசியா உம்மா, (5) அபூபக்கர்லாகே, இஸ்மெயில் | தோட்டம் .. | 1 | 0 | 9 |
| 33 | ஷை .. | அசலானலெப்பலாகே இஸ்மா லெப்பே .. .. | ஷை .. | 1 | 3 | 31 |
| 35 | வேகொலேபிற்றியாவத்த | பச்சிறத்தம்பிலாகே குஞ்சுவாப்பு லெப்பெ .. | ஷை .. | 0 | 3 | 5 |
| 36 | மீகஹாமுலவத்த .. | உமறுலெப்பெலாகே அபூபக்கர்லெப்பெ .. .. | ஷை .. | 0 | 2 | 34 |
| 37 | இஸ்வற்றியவத்த .. | அசனலெப்பெலாகே இஸ்மாலெப்பெ .. .. | ஷை .. | 0 | 1 | 13 |
| 47 | வெறலுகஹாமுலவத்த | (1) சிக்கந்தலாகே மறியம்முனச்சி, (2) இஸ்மா லெப்பெலாகே பாத்தும்மா | ஷை .. | 0 | 3 | 29 |
| 53 | மயிலாகஹாமுலவத்த | இபுறு லெப்பெலாகே செலெமா லெப்பே, கன் ஆருச்சி .. | ஷை .. | 1 | 0 | 38 |
| 55 | மயிலகஹாமுலவத்த அல்லது போகஹாமுலவத்த | ஷை .. .. .. | ஷை .. | 2 | 0 | 24 |
| 57 | ஷை .. | ஷை .. .. .. | ஷை .. | 1 | 3 | 4 |
| 62 | கஹாட்டகஹாமுலவத்த அல்லது கொள்ளுதலனகலகாவவத்த | உடயறலாகே, அசனுலெப்பே, வெல்விதானே .. | ஷை .. | 0 | 1 | 32 |
| 64 | கினஹகாமுலவத்த அல்லது வாகொள்ளேபிற்றியேவத்த | இபுறுலெப்பெலாகே செலமா லேப்பெ, கன் ஆருச்சி .. | ஷை .. | 2 | 3 | 9 |
| 72 | வாகொள்ளேபிற்றியேவத்த | செலெமாலெப்பெலாகே இபுறுலெப்பே .. | ஷை .. | 0 | 2 | 20 |
| 73 | வாகொள்ளே பிற்றியேவத்த | (1) அகமது லெப்பெலாகே நாஊறு, (2) இபுறுலெப்பெலாகே அகமது லெப்பெ, (3) அகமது லெப்பெலாகே முகமது இஸ்மெயில், (4) அகமது லெப்பெலாகே செலெமான் லெப்பெ, (5) அகமது லெப்பெலாகே ஆசியா உம்மா, (6) அகமது லெப்பெலாகே உதுமலெப்பெ, (7) அகமது லெப்பெலாகே இபுறுலெப்பெ, (8) அகமது லெப்பெலாகே முகமது லெப்பெ | தோட்டம் .. | 0 | 2 | 21 |
| 79 | ஷை .. | (1) லெப்பெலாகே அகமது லெப்பெ, (2) அகமது லெப்பெலாகே முகமது இஸ்மெயில், (3) அகமது லெப்பெலாகே சொலமான் லெப்பெ, (4) அகமது லெப்பெலாகே முகமது லெப்பெ, (5) அகமது லெப்பெலாகே ஆசியாஉம்மா, (6) அகமது லெப்பெலாகே இபுறுலெப்பெ (7) அகமது லெப்பெலாகே உதுமாலெப்பெ | ஷை .. | 10 | 0 | 29 |
| 80 | ஷை .. | இபுறுலெபெலாகே அகமது லெப்பெ .. | ஷை .. | 1 | 1 | 8 |
| 81 | ஷை .. | (1) இஸ்மாலெப்பெலாகே நாஊற்லெப்பெ, (2) இஸ்மாலெப்பெலாகே காசி லெப்பெ, (3) இஸ்மாலெப்பெலாகே அபூபக்கர் | ஷை .. | 2 | 0 | 34 |
| 82 | ஷை .. | அதம்புள்ளைலாகே முகம்மது லெப்பெ .. | ஷை .. | 2 | 1 | 31 |
| 85 | முதலியபிற்றியவத்த | (1) அகமதுலெப்பெலாகே இஸ்மாலெப்பெ, கொற்றம்வேபிற்றிய, கிறத்தலானேகோறளை, (2) அகமது லெப்பெலாகே பாத்தும்மா, கிந்தகொள்ளே, மெத்தேகெற்றிய கோறளை, (3) அதம்புள்ளைலாகே முகம்மது லெப்பெ | ஷை .. | 3 | 3 | 15 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 86 | வெலங்கொள்ளே வத்த | கேணல் ரி. ஜி. ஜயவாதன, கொழும்பு, மொள்ளிகொடவிலுள்ள சின்னத்தம்பிலாகே தம்பி லெப்பெயால் வாதாடப்பட்டது | தோட்டம் .. | 18 1 10 |
| 87 | ஷை .. | ஷை .. .. .. | ஷை .. | 1 0 28 |

தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 100 மட்டும்.

இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் காணி நிர்ணய உத்தியோகஸ்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

காணி விசாரணைதிகாரி கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ஆண்டு ஆனி௴ 20 ந் திகதி.

சீ. வீ. பிறேயின்,
காணி விசாரணைதிகாரி.

---

**No. 10,222, S. O.**—1932 ம் ஆண்டு (செப்ரெம்பர்) புரட்டாசி௴ 10 ந் திகதி, சனிக்கிழமை, முற்பகல் 8.30 மணிக்கு நாரம்மல வாடிவீட்டில் காணியுரிமை நிர்ணய உத்தியோகஸ்தரவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

7 காணித்துண்டுகள், வடமேன் மாகாணம், குருனாகல் டிஸ்திறிக் கற்றுகம்பொல ஹற்பற்று, மெத்தேகெற்றிய கோறளை.

இலங்கை யளவைப் பிரதம்ப்படம் 2,584. குறிச்சி—குறிகொற்றுவ.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 88 | வெல்லங்கொள்ளேவத்த .. | சின்னத்தம்பிலாகே தம்பிலெப்பெ, மொள்ளிகொட | தோட்டம் .. | 0 3 2 |
| 90 | முத்லியபிற்றியவத்த .. | (1) உடயாறலாகே அசனலெப்பெ, வெல்விதானை, (2) அகமது லெப்பெலாகே ஆசியா உம்மா | ஷை .. | 0 2 3 |
| 92 | ஷை .. | (1) உடயாறலாகே அசனலெப்பெ, வெல்விதானை, (2) அகமது லெப்பெலாகே ஆசியா உம்மா, (3) ரூஜபக்ஸபேடி துறையலாகே சங்கா | ஷை .. | 3 1 37 |
| 98 | பிங்கும்புறேவத்த .. | இவுல்கும்புறே பியறத்ன கித்தகொள்ள விகாறே, ஹொறம்பாவே, ஹிந்தகொள்ள கோவிலுக்கு நம்பிக்கைப் பொறுப்பாளி | ஷை .. | 1 1 25 |
| 99 | வேகந்தபாவுலவத்த அல்லது கலகாவவத்த | (1) உதுமலெப்பெ குறுன்னகல உமறுலெப்பெ, (2) உதுமலெப்பெ குறுன்னகல யுசுப் லெப்பெ, (3) ஆதம்புள்ளை குறுன்னகலாகே நாவூர் உம்மா, (4) ஆதம்புள்ளை குறுன்னகலாகே அகமது லெப்பெ, (5) ஆதம்புள்ளை குறுன்னகலாகே பாத்தும்மா, (6) உடயாறலாகே அசனலெப்பெ, விதானை, (7) இபுருலெப்பெலாகே அகமது லெப்பெ | ஷை .. | 1 0 36 |
| 100 | ஷை .. | ஷை .. .. | ஷை .. | 1 2 26 |
| 102 | தெலம்புகஹாமுலவத்த .. | (1) அறியமதலாகே காசிலெப்பெ, பிந்தெனிகொட, (2) அறியமதலாகே ஆசியா உம்மா, நுகசஹாகெதற, உடுகஹா கோறளை மேற்கு | ஷை .. | 0 1 15 |

தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 100 மட்டும்.

இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் காணி நிர்ணய உத்தியோகஸ்தரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

காணி விசாரணைதிகாரி கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ஆண்டு ஆனி௴ 20 ந் உ.

சீ. வீ. பிறேயின்,
காணி விசாரணைதிகாரி.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பருத்தித்துறையில் ஒரு வெள்ளவாய்க்கால் வெட்டுகிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமப்படத்து இல. 8,313. குறிச்சி—புலோலி கிழக்கு, சுகாதாரசங்க எல்லைக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கண்டயன்தென்னை சோலைவரி நொம்பர் 74 | 50 வயதுள்ள 2 தென்னமரங்கள் கொண்ட தோட்டம் | புலோலி கிழக்கு சிதம்பரம் கோயில் பொறுப்பாளர்களாகிய சோமசுந்தர குருக்கள் கைம்பெண் மங்களம்பிக்காய் அம்மாளும் எஸ். பஞ்சாட்சர குருக்களின் மனைவி கமலம்பிகாய் அம்மாள் | 0 0 4·97 |
| 2 | கண்டயன்தென்னை சோலைவரி நொம்பர் 66 | 50 வயதுள்ள ஒரு பனைமரம் கொண்ட தோட்டம் | பருத்தித்துறை தொம்மை கிறிஸ்தோ .. | 0 0 5·23 |
| 3 | கண்டயன்தென்னை சோலைவரி நொம்பர் 76 | 50 வயதுள்ள 8 பனைமரங்கள் கொண்ட தோட்டம் | தம்பனை பி. அப்பாத்துரை மனைவி நாகாத்தையும் கே. நாகப்பர் மனைவி சின்னாச்சி பிள்ளையும் | 0 0 8·76 |
| 4 | கண்டயன்தென்னை சோலைவரி நொம்பர் 93 | 50 வயதுள்ள ஒரு பனைமரம் கொண்ட தோட்டம் | பருத்தித்துறை சிங்காரவேலு விநாயகம் .. | 0 0 3·31 |
| 5 | நாவத்தென்னை சோலைவரி நொ. 57 | 2 வயதுள்ள 2 தென்னங்கன்றுகள் உள்ள ஒரு பனம் தோட்டம் | புலோலி கிழக்கு கே. சின்னையா கைம்பெண் நாகரெட்னம் | 0 0 4·02 |

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 6 | நாவத்தினி சோலை வரி நொம்பர் 58 | பண்படுத்தாத ஒரு பனம் தோட்டத்தின் பகுதி | புலோலி கிழக்கு ஏ. திருநாவக்கரசு, எஸ். அருணசலம், கே. சின்னையா கைம்பெண் நாகரெட்னம், கந்தையா கைம்பெண் லெட்சுமியார், ரி. வயிரமுத்து, ரி. வயிரமுத்துவின் மகள் தங்கம் | 0 0 1·30 |
| 7 | நாவத்தினி சோலை வரி நொம்பர் 56 | 50 வயதுள்ள 4 தென்னமரங்ளும் 2 பனைமரங்கள் கொண்ட ஒரு பனம் தோட்டம் | புலோலி கிழக்கு ரி. சின்னதுரை மனைவி ராசம்மாவும், கே. சின்னதுரை மனைவி தங்கம்மாவும் | 0 0 10·05 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பறறிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ஹு ஆடிமாசம் 19 ந தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு பரித்தித்துறை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் அக்காணிகளைப்பற்றிய உறுதிகளைக் கொண்டுவந்து காட்டும்படிக்கும் இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாட்பாணக் கச்சேரி,
1932 ம் ஹு ஆனிமீ 16 ந உ.

ஈ. தீ. டைசன்,
அரசாட்சி ஏசண்டு, வடமாகாணம்

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 119. (குருநாக்கல்).

இதனேடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதறகேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ஹு (ஜூன்) ஆனிமீ 24 ந தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1932 ம் ஹு (ஏப்றில்) சித்திரைமீ 5 ந தேதியிலன்று குருநாக்கல் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஜே. ஆர். வோல்ரஸ்.
வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு : (*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ற் அவர்களிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழே சொல்லப்படுங் காணித்துண்டுகள் வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கல் வாயுடவிலிஹற்பத்துவில் குடாகல்பொட கோறளையில் ரித்தவெல்ல கிராமத்தில் இருக்கின்றன.

பிரதமபடத்து இல. 6,823.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | ரித்தவெல்லெவவ .. .. | 36 | 3 | 3 |
| 2 | ஷை .. .. | 5 | 0 | 4 |
| 3 | — .. .. | 0 | 0 | 13 |
| 5 | அங்கவிபிற்றிய அல்லது ரித்தவெல்லவவ .. | 2 | 0 | 22 |
| 6 | கனவெகூனமுல்லவத்த .. | 0 | 0 | 29 |
| 7 | ரித்தவெல்லெவவ .. .. | 0 | 2 | 15 |
| 8 | ஷை .. .. | 0 | 2 | 10 |
| 9 | வவெகல .. .. | 1 | 1 | 24 |
| 10 | இகலகமெகேன .. .. | 0 | 3 | 5 |
| | மொத்தம் .. | 47 | 2 | 5 |

தவிர்க்கவேண்டிய துண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ரித்தவெல்லெவத்தகடெ .. | 0 | 0 | 5 |

எல்லைகள் : வடக்கே-ஜி. ஏ. குமஞ்சிஞேஞ உரித்தாடும் பொடிலிம நெல்வயலும், குருநாக்கல் புத்தளம் ரூேட்டும், யூ. ஹென்றிக்பெறேரு உரித்தாடும் மத்தயவெலவும்; கிழக்கே-6323 ம் இலக்கப் பிரதமபடத்தின் 11 ம் இலக்கத் துண்டும், யூ. ஹென்றிக் சில்வாவுக்குரிய 96,824 ம் உறுதியில் காட்டப்பட்ட காணியில் ஒரு பகுதியும், உடத்தப்பொலக் கிராமஎல்லையும், எம். பிருன்சிஸ்பிள்ளை உரித்தாடும் கலவெவத்தவும், எம். பிருன்சிஸ்பிள்ளை உரித்தாடும் கனவெகுன் முல்லவத்தவும் உடத்தப்பொல, கலகொகெதற என்னுங் கிராமங்களின் எல்லைகளும்; தெற்கே-ஜோன் பெறேரு உரித்தாடும் மவிதலுப்பொத்தவும், குருநாக்கல் புத்தளம் ரூேட்டும், மவிதலுப் பொத்தக் கிராம எல்லையும், ஜோன் பெறேரு உரித்தாடும் டெமறறக்கவெலவும்; மேற்கே-எச். எம். கிரிமண்டா உரித்தாடும் பதங்கிசொல்லெவத்தவும், எச். எம். கிரிபண்டாவும் மறுவும் உரித்தாடும் ரித்தவெல்லெவலவும் டீ. பி. களுவா உரித்தாடும் கலகவவத்தவும், கோயிலின் பராபரிப்புக்காரர் உரித்தாடும் ரித்தவெலெவிகாரையும், ஜி. ஏ. குமஞ்சிஞேஞ உரித்தாடும் பொடிலிமவும்.

---

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 120 (குருநாக்கல்).

இதனேடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ஹு (ஜூன்) ஆனிமீ 24 ந தேதியிலிருந்து மூன்று மாசகாலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்செல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனலறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1932 ம் ஹு (ஏபிறில்) சித்திரைமீ 4 ந தேதியிலன்று குருநாக்கல் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஜே. ஆர். வோல்ரஸ்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏசன்ற்.

குறிப்பு—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ற் அவர்களிடமும், அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க

அட்டவணை.

கீழே சொல்லப்படுங் காணித் துண்டுகள் வடமேல் மாகாணத்தில குருநாக்கல் டிஸ்திறிக்கில் வ' யுடவில்லிஹறம்பத்துவில் குடாகலபொட கோறளையில் பமுனெஸ கிராமத்தில் இருக்கின்றன.

பிரதமபடத்து இல. 6,782.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | பமுனெசவவ .. | .. 9 3 29 |

எல்லைகள்:—வடக்கே டபிள்யு. ஏ. ஜூலிஸ் அப்பு உரித்தாடும் படலவெவத்தவும், உறவெலவைச்சேர்ந்த எம். ஏ. டொன் சப்பின் அப்புகாமிக்குரியதும் 371,661 ம் இலக்க உறுதியில் காட்டப்பட்டதுமான மெதபமுனகொற்றவெ போககமுலகேன முதலிய பெயர்கொண்ட காணியும்;

கிழக்கே: கே. டி. ஏபிரகாம் சிஞ்ஞோவும் மறவும் உரித்தாடும் தவல்லெகும்புறவும், அல்விஸ் பெறேருவின் உரிமைக்காரர்களுக்குடையதும் 35,431 ம் இலகக உறுதியில் காட்டப்பட்டதுமான கறம்பெவத்தவும்;

தெற்கே: கிராமவாசிகளால் உரித்தாடப்பட்ட 4,538 ம் இலகக பிரதமப்படத்தின் G 118 ம் இலககத துண்டாகிய கறம்பெவத்தவும், ஆர். ஏ. ப்பிலிஸ் பெறேருவுக்குரியதும், 354,630 ம் இலக்க உறுதியில் காட்டப்பட்டதுமான கறம்பெவத்தவும், முடி உரிததாடும் 4,538 ம் இலக்கப் பிரதம படத்தின் C 118 ம் இலக்கத் துண்டாகிய கறம்பெவத்தவும்;

மேற்கே: கே. ஏ. பிறம்பிசிங்ஞோ உரித்தாடும் வாபொடெவத்தவும், ஆர். எம். பீறிஸ்அப்பு உரித்தாடும் வாபொடெவத்தவும், டபிள்யு. ஏ. மங்கோசாமி உரித்தாடும் வாபொடெவத்தவும், டபிள்யு. ஏ. ஜூலிஸ் அப்பு உரித்தாடும் படலவெவத்தவும்.

---

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப் படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் ரத்தினபுரி டிஸ்றிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழககுவிசாரணை, 1932 ம் ஆண்டு ஜூலை மாதம் 11 ந திகதியாகிய திங்கள்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப் படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும்உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
சீ. எச் கொலின்ஸ்,
பிஸ்கால் சப்பிரகாம மாகாணம்.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1932 ம் ௵ ஜூன் மீ 11 ௨.



PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.